# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

## தரம் 7



அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

# தரம் 7

**(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

**வாசிப்புத் துணை நூல்**
**பரத நாட்டியம்**
**தரம் 7**

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
முதற் பதிப்பு : 2016

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை

# அறிமுகம்

இலங்கைப் பாடசாலை முறைமையில், மையப் பாடங்களாக அதாவது பிரதான பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக நீண்டகாலமாகப் பாடத்திட்டத்துக்கு இணையாக ஆசிரியர் வழிகாட்டியும் (Teachers' Guide), பாடநூலும் (Text Books) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்களுக்கும், பாடநூலை மாணவர்களுக்கும் வழங்கி மாணவர்களது அறிவுக் கண்களைத் திறக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அழகியற் பாடமானது அறிவை மாத்திரமன்றி நற்பண்புகளையும், நன்மனப்பாங்குகளையும் உடைய திறன்களை வளர்ப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. மனிதன் நற்பண்புடையவனாகும்போது அவனது நடத்தை மனித வர்க்கத்தின் இருப்புக்கும், சூழலினதும் இயற்கையினதும் இருப்புக்கும் சாதகமாக அமையும். அறிவும் நற்பண்புகளும் கொண்ட மாணவனையே இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது. அவ்வாறான ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அழகியற் பாடத்தையும் ஒரு பிரதான பாடமாகக் கருதிச் செயற்படுவது பொருத்தமானது. அதனை உணர்ந்து இப்பாடத்தின் மேம்பாட்டுக்காக நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் நாம், மையப் பாடங்களை மட்டுமல்லாது இப்பாடத்துக்கும் பாடநூல்கள் தயாரிக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறோம். இது ஒரு பிரதான பாடம் அல்லாதபோதும், ஆசிரியரது கற்பித்தற் பணிக்குத் துணையாவதற்கான ஒரு கைந்நூலாக இவ்வாறான ஒரு மேலதிக வாசிப்பு நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந் நூல் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூலுக்கு ஒப்பான ஒன்றல்ல. எனினும், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வலுவூட்டத்தக்க, தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஒரு வளமாகும். மேலும் நாடெங்கிலும் இப்பாடவிடயங்கள் தொடர்பான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இது துணையாகும்.

வகுப்பறைக்கு வலுவட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இக் கற்றல் - கற்பித்தல் வள நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் சிறப்பான பேறுகள் வருமாறு:

1. ஆசிரியர்களுக்குத் தேவையான பாடவிடயங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி வழங்குவதன் மூலம் ஆசிரியது வினைத்திறனை மேம்படுத்தல்.
2. ஆசிரியர் வழிகாட்டியில் விரிவாக இடம் பெற்றுள்ள பாடவிடயங்களை மேலும் விரிவாக முன்வைத்தல்.
3. ஆசிரியர் வழிகாட்டிக்குக் குறை நிரப்புதலாக அமைதல்.
4. கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகத்தக்க பாடவிடயங்கள் தொடர்பாகத் தேசிய ரீதியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டவட்டமான விடயங்களை/ தர்க்கங்களை முன்வைத்தல்.
5. பாடவிடயங்களின் சமநிலை மற்றும் திட்டவட்டமான வரையறைகளை முன்வைத்தல் மூலம் மதிப்பீட்டுப் பணிகளை இலகுபடுத்தல்.
6. ஆசிரியரது அறிவை, பாடத்திட்டத்துக்கு அப்பாலும் விரிவுபுடுத்தி, பாடவிடய அறிவு தொடர்பான தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
7. ஆசிரியர்கள் மாணவர்கள் இரண்டு தரப்பினருக்கும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை அர்த்தமுள்ள இனிய அனுபவமாக்குதல்.

உரிய ஒரு கற்றல் வளமாகிய இது, எமது நாட்டு மாணவ சந்ததியின் அறிவையும் நற்பண்புகளையும் வளர்ப்பதற்கான இனிய கற்றற் சூழலை உருவாக்குவதற்கும் ஆசிரியர்க்குத் துணையாக அமையும். ஆசிரியர்களாகிய உங்களது செயலூக்கமும் அறிவாற்றலும் மென்மேலும் விருத்தியடையட்டும். மேலும் சமகால மாணவ மாணவியர்க்கு அழகியற் பாடக் கற்றல் கற்பித்தலானது ஓர் இனிய அனுபவமாக அமையட்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**சாஸ்திரபதி சுதத் சமரசிங்ஹ,**
பணிப்பாளர் (அழகியற் கல்வித்துறை),
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றலானது தொடர்ச்சியான கணிப்பீட்டுக்கு உட்பட்டு வருகின்றது. உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்குப், பரந்தளவு அனுபவங்கள் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு பரந்தளவு அனுபவங்களுடன் உயர்ந்த கணிப்பீட்டைப் பெறுவோர் அதிகளவு மகிழ்ச்சியடைவர். இதன் பொருட்டு உரிய நபர்கள், இடங்கள், பொருள்கள் மற்றும் சூழ்நிலைகள் கிடைத்தல் அவசியமாகும்.

பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவடையச் செய்வதற்காக, மேலதிக வாசிப்பு நூலைத் தயாரிக்க முடிந்தமையையிட்டுத் தேசிய கல்வி நிறுவகம் மகிழ்ச்சியடைகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

மாணவர் சமூகம் மேற்படி மேலதிக வாசிப்பு நூலைப் பயன்படுத்தி, அந்நூலில் காணப்படும் ஏனைய அறிவு மூலங்களையும் தமதாக்கிக் கொண்டு உயர்ந்த அடைவுமட்டத்தை நோக்கிச் செல்ல முடியும். இதற்கிணங்க மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் உட்பட அனைவரும் இது குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். மேற்படி மேலதிக வாசிப்பு நூலை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்துவதற்குத் தேவையான சிறந்த சூழல் ஏற்பட வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

**கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்,**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## முன்னுரை

புதிய சவால்களை எதிர்நோக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வாசிப்பு நூல் மாணவர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பது கலைகளுக்கும் பொருந்தி வருவதே. அந்த வகையில் புதிய சிந்தனைகளுடன் தயாரிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டமானது பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக நாட்டில் இனச் சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய சிந்தனையுடன் புதிய நாளொன்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களிடையே சிந்தனைத் தடங்கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகிறது. சிறியளவு வளங்களில் பெருமளவு பயன்பெறவேண்டியது இன்றைய சமுதாயத்தின் நிலையாய் இருப்பினும் இந்நூல் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் பெருந்துணை புரியும் ஒரு சாதனமாகும்.

திருமதி.நிஷாந்தராகினி திருக்குமரன்,
செயற்றிட்டத் தலைவர்,
அழகியற்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி.கே.எ.ஹரிஸ்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>கல்வி வலயம்,<br>கம்பளை. |
| மொழி மேற்பார்வை | : | திரு.எஸ்.செல்வகுமார்,<br>ஆசிரியர்,<br>யா /பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | திருமதி.கே.எ.ஹரிஸ்<br>ஆசிரிய ஆலோசகர்<br>கல்வி வலயம்<br>கம்பளை.<br><br>செல்வி.செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்,<br>யா / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர |

# உள்ளுறையாக


| | |
|---|---|
| அறிமுகம் | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| முன்னரை | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| உள்ளுறையாக | vii |
| நாட்டிய நூல்களும் ஆசிரியர்களும் | 1 |
| நடனத்தின் உட்பிரிவுகள் | 2 - 3 |
| நவரசம் | 4 |
| இசைக் குறியீடுகள் | 5 |
| புராண வரலாறு | 6 |
| மாயங்கள் செய்திட வந்தாண்டி | 7 |
| மந்திரக் காரண்டி அம்மாண்டி | 8 |
| பூஜா நடனப் பாடல் | 9 |
| தாண்டவம் | 10 |
| லாஷ்யம் | 11 |
| கரணம், அங்ககாரம், நிருத்த ஹஸ்தம் | 12 |
| தா தெய் தெய் த தாளம் | 13 |
| தெய் ஹத் தெய் ஹி தாளம் | 14 |
| பஞ்ச ஜாதி | 15 |
| காமன் கூத்து | 16 |
| ஆதி ரூபக தாள விளக்கம் | 17 |
| சப்த தாளம் | 18 |
| புஸ்பாஞ்சலி | 19 |
| கரகம் | 20 |
| காவடி | 21 |

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0 :-** | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.2 :-** | பரத நாட்டிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். |
| **செயற்பாடு** | **4.2.1 :-** | நாட்டிய நூல்களின் பெயர்களையும், அவற்றின் நூலாசிரியர்களையும் அறிந்து கொள்வோம். |

## நாட்டிய நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| ஸ்வபோத நவநீதம் | மாங்குடி துரைராஜ ஐயர் |
| பரத நாட்டியம் | த. பாலசரஸ்வதி , வே.இராகவன் |
| அபிநயசாரசம்புடம் | சேட்டலூர் நாராயணஐயங்கார் |
| அபிநய நவநீதம் | சேட்டலூர் நாராயணஐயங்கார் |
| சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் |
| இந்திய கிராமிய நடனங்கள் | கபிலா வாத்ஸ்யாயன் |
| நாட்டியக் கலை | வே. ராகவன் |
| தெய்வீக ஆடற்கலை | வழுவூர் இராமையாபிள்ளை |
| பரதக்கலைக் கோட்பாடு | கலாநிதி பத்மா. சுப்பிரமணியம். |
| பரதநாட்டியக் கலை | கலைமாமணி சரஸ்வதி |
| பரதக்கலை | வி.சிவசாமி |
| தென்னாசியக் கலை வடிவங்களின் நாட்டிய சாஸ்திர மரபு | வி.சிவசாமி |
| நடனசாரம் | லீலாம்பிகை செல்வராஜா |
| ஆடற்கலை | லீலாம்பிகை செல்வராஜா |
| நாட்டியக்கலை<br>அரங்கவியலும் ஆடற்கலையும்.<br>அருங்கலை ஆடற்கலை<br>நுண்கலை நடனக்கலை<br>இலங்கையின் சாஸ்திரிய நாட்டியங்கள்<br>பைங்கலை பரதக்கலை<br>Bharathanatyam Basic study<br>Bharathanatyam Divine dance | சுபாசினி பத்மநாதன் |
| தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் | கார்த்திகா.கணேசர் |
| காலம்தோறும் நாட்டியக்கலை | கார்த்திகா.கணேசர் |
| சங்கீதரத்னாகரம் | சாரங்கதேவர் |
| சங்கீத தர்ப்பணம் | சதுரதாமோதார் |
| சங்கீத சாராம்ருதம் | தஞ்சைதுளஜா மகாராஜா |
| பரதார்ணவம் | நந்திகேஸ்வரர் |
| ஈழத்தமிழர் கலையும் கிராமியக்கூத்தும் | சபா. ஜெயராசா |

**தேர்ச்சி** **4.0:-** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.4:-** பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார்.

**செயற்பாடு** **4.4.1:-** நடனத்தின் உட்பிரிவுகளை அறிந்து கொள்வோம்.

## நடனத்தின் உட்பிரிவுகள்

நடனத்தின் உட்பிரிவுகள் மூன்று வகைப்படும்.

அவையாவன, நிருத்தம், நிருத்தியம், நாட்டியம்,

### நிருத்தம்

- தாளம், லயம் ஆகியவற்றிற்கு ஏற்ப இராக ஸ்வரங்களுக்கோ, மிருதங்க ஜதிகளுக்கு ஏற்றவாறு கைகால்களின் இணைந்த அபிநயம். அதாவது அடவுகளைப் பிரயோகம் செய்தல் நிருத்தம் ஆகும்.

- இதிற் கருத்து வெளிப்படுவதில்லை.
  உதாரணம் : அலாரிப்பு, ஜதீஸ்வரம்.

### நிருத்தியம்.

- ஒரு பாடலின் கருத்துப் புலப்படும்படி உறுப்புகளால் அபிநயம் செய்து நடனம் புரிதல் நிருத்தியமாகும். தாளத்தினைப் பாதங்களும் பாவத்தினைக் கண்களும் மற்றும் கை முத்திரைகளும் வெளிக்கொணரும்.
  உதாரணம் : பதம், கீர்த்தனை

## நாட்டியம்

- இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் ஒருங்கிணைந்த கலை நாட்டியம்.

- நடனத்திற்குச் சிறந்த ரஸஅபிநயம் பாவஅபிநயம் இவைகளைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதே நாட்டியம் ஆகும்.

- நாட்டிய சாஸ்திரத்திற் கூறியபடி கரணம், அங்கஹாரம், ஜதி, யதி போன்ற முறைகளைக் கொண்டு, பல பாத்திரங்கள் ஏதேனும் ஒரு கதையைச் சுவைபட இசையுடன் எழில் மிக அபிநயித்துக் காட்டுதல் நாட்டியமாகும்.

- கதை தழுவி வரும் ஆடலைப் பண்டையோர் கூத்து என்றனர்.

- நடத்தல் என்னும் சொல்லிலிருந்து சிறப்பான கலைப்பொலிவுள்ள நடை என்னும் பொருளில் நாட்டியம் எனும் சொல் தோன்றியிருக்கலாம்.

- நாட்டியம், நாடகம் தொடக்கம் ஈஹ மிருகம் முதலாகப் பத்து வகைப்படும்.

- இராமாயண, மகாபாரதக் கதைகளிலிருந்து நாடகக் கருவைத் தேர்ந்தெடுப்பது, உண்மைச் சம்பவங்களிலிருந்த தேர்வது, ஒரு பாத்திரம் மட்டும் உள்ளது, ஹாஸ்ய ரஸம் மேலோங்கி இருப்பது என இப்பத்து வகைகள் வெவ்வேறு கதாபாத்திரங்களின் குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும்.

- நாடகத்தை ரூபம் என்றும் அழைப்பதுண்டு. இதன் பொருள் வடிவம் ஆகும்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0 :-** | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.4 :-** | பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார். |
| **செயற்பாடு** | **4.4.2 :-** | நவரஸம் பற்றி அறிந்து கொள்வார். |

## நவரஸம்

கலையானது ரசிகனுக்கு களிப்பூட்டும் தன்மையானது. நாடக, நடன நிகழ்வுகளை அவதானித்தும் உரையாடல்களை, இசைகளைக் கேட்டும் சிற்பம், ஓவியம், இவற்றைப் பார்த்தும் பார்வையாளர் அல்லது ரசிகர்கள் உளக்கிளர்ச்சி அடைகின்றனர். இதுவே ரஸமாகின்றது. ரஸம் என்பது சுவைக்கப்படுகின்றது எனப் பொருள்படும். ரஸம் கலையின் உயிராகும்.

சமைக்கப்படும் உணவில் உப்பு, புளி என்ற பல்வகைப் பொருட்களின் சேர்க்கையால் உணவு சுவை தருவதாக இருப்பது போல, பல்வகை அபிநயங்களின் சேர்க்கையால் காண்போரின் மனதில் சுவை ஏற்படுகின்றது. ஓன்பது வகையான சுவைகளும் நவரஸம் எனப்படும்.

சிருங்காரம், பீபத்ஸம், பயானகம், அற்புதம், ஹாஸ்யம், வீரம், ரௌத்திரம், சாந்தம், கருணை இவை ஒன்பதும் நவரஸங்களாகும்.

**தேர்ச்சி** **4.0:-** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.4:- பரத நாட்டியம், கண்டியர் நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார்.

**செயற்பாடு** **4.4.3:-** இசைக்குறியீடுகளைக் கற்றுக் கொள்வோம்.

## இசைக் குறியீடுகள்

- நடன, இசை, உருப்படிகளை எழுதும் போது பயன்படுத்த வேண்டிய குறியீடுகளே இசைக்குறியீடுகள் எனப்படும்.

| | |
|---|---|
| ஆவர்த்தன முடிவு | // |
| அங்க முடிவு | / |
| நெடில்ஸ்வரம் | ஸா |
| குறில்ஸ்வரம் | ஸ |
| அந்நியஸ்வரம் | * |
| கமகம் | ~~~ |
| லகு | \| - கணை |
| துருதம் | O - மதி |
| அனுதுருதம் | ∪ – பிறை |
| அனுமந்தரஸ்தாயி | ஸ̤ |
| கீழ்ஸ்தாயி (மந்தரஸ்தாயி) | ஸ̣ |
| மத்திம ஸ்தாயி | ஸ |
| மேல்ஸ்தாயி (தாரஸ்தாயி) | ஸ̇ |
| அதிதாரஸ்தாயி | ஸ̈ |
| , | 1 மாத்திரைகள் |
| ; | 2 மாத்திரைகள் |
| தகதிமி | 4 மாத்திரைகள் |
| $\overline{\text{தகதிமி}}$ | 2 மாத்திரை |
| $\overline{\overline{\text{தகதிமி}}}$ | 1 மாத்திரை |

**தேர்ச்சி** **5.0:-** நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1 :-** புராண வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு** **5.1.1 :-** புராண வரலாற்றினை ஆராய்ந்து அறிவோம்.

## புராண வரலாறு

த்ரேதாயுகத்தின் ஆரம்பகாலத்தில் மக்கள் மகிழ்ச்சி இன்றிக் கீழ் நிலைக் குணங்களால் பீடிக்கப்பட்டிருந்தனர். எனவே, தேவர்கள் அனைவரும் பிரம்மாவிடம் சென்று எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும் கேட்கும் படியாகவும், பார்க்கும் படியாகவும் உள்ள பொழுது போக்கு ஒன்றை ஆக்கித் தருமாறு வேண்டினர். பிரம்மாவும் அதை ஏற்று நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் இவை முறையே இசையோடு பாடப்படும் பகுதிகள்(வசனம்), அபிநயம், இசை, ரஸம், ஆகியவற்றை எடுத்து, ஐந்தாவது வேதமாகிய நாட்டிய வேதத்தைப் படைத்தார்.

பிரம்மா, தான் படைத்த ஐந்தாவது வேதத்தைப் பரதமுனிக்கு உபதேசித்தார். பரதரும் தனது மக்கள் நூறு பேருக்குப் பயிற்சியளித்தார். ஒரு நாள் பரத முனிவர் பிரம்ம தேவனின் ஆணையின்படி கைலயங்கிரியில் சிவபெருமான் முன்னிலையில் ''அமிர்த மதனம்'', ''திரிபுரதாகம்'' எனும் நாடகங்களை அரங்கேற்றினார். பரமசிவனும் அதைப் பார்த்து மகிழ்ந்து முன்பு தான் செய்த நிருத்த வகையையும் இணைத்துக் கொள்ளும்படி கூறி அதனை உபதேசம் செய்து தண்டு முனிவரைத்(நந்தி) தாண்டவமும், பார்வதியை லாஸ்யமும் கற்பிக்கும் படி ஆணையிட்டார்.

பார்வதி பூவுலக மன்னன் பாணாசுரனின் மகள் உஷைக்குக் கற்பித்தார். உஷை இக்கலையைத் துவாரகையின் இடையர் குலப்பெண்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவர்கள் சௌராஷ்டிரப் பெண்களுக்குக் கற்பித்தனர். கடவுளர்களால் பாரம்பரியமாகக் கற்றுக் கொடுக்கப்பட்டு இக்கலை வடிவம் இவ்வாறு உலக மக்களிடையே பரவத் தொடங்கியது.

**தேர்ச்சி 2.0 :** சூழலிற் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** அபிநயப்பாடலிற்கு அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2 :** மாயங்கள் செய்திட வந்தாண்டி, மந்திரக் காரன்டி அம்மாடி ஆகிய பாடல்களைப் பாடி அபிநயம் அமைத்து அபிநயித்துக் காட்டுவோம்.

## அபிநயப் பாடல்

இராகம் : யதுகுலகாம்போதி தாளம் - ஆதி (திஸ்ரநடை)

1. மாயங்கள் செய்திட வந்தான்டி - கண்ணன்
மாடுகள் மேய்த்துத் திரிந்தான்டி
ஆயர் குலத்துவம் கொண்டான்டி - அந்த
அச்சுதனைப் போற்றி ஆடுங்கடி (மாயங்கள் )

2. கோவர்த்தன மலை தூக்கினான்டி - கண்ணன்
கோபியர் துயர்களைத் தீர்த்தான்டி
ஆவலாய்க் கண்ணனைப் பாடுங்கடி - அருள்
ஆனந்தமாய்க் கண்ணன் தருவான் - டி (மாயங்கள்)

# அபிநயப் பாடல்

தாளம் : ஏகம் (திஸ்ரநடை)

மந்திரக் காரண்டி அம்மாடி அவன்
மயக்கவோர் எண்ணமும் கொண்டாண்டி
தந்திரமாகவே என்னை அழைத்தாண்டி
தாலிகட்டும்படி சொன்னாண்டி.

இந்தக் கிழவன் பொல்லாதவண்டி - அம்மா
ஏமாற்ற எண்ணமும் கொண்டாண்டி
வேங்கை மரமாய் நின்றாண்டி - அம்மா
வேடர் தமையெல்லாம் வென்றாண்டி.

தேனும் தினைமாவும் தின்று கொழுத்தாண்டி
தேவியை வாவென்று கூவி அழைத்தாண்டி
யானையை வாவென்று கூவி அழைத்தாண்டி
தானே போகும்படி சொன்னாண்டி.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **3.0 :** | பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **3.4 :** | நாட்டிய நிகழ்வொன்றினை இராக தாளத்துடன் அபிநயித்துக் காட்டுவார். |
| **செயற்பாடு** | **3.4 :** | பூஜா நடனத்தினை அபிநயித்துக் காட்டுவோம். |

## பூஜா நடனப் பாடல்

இராகம் : பிருந்தாவன சாரங்கம் தாளம் : ஆதி (திஸ்ர நடை)

பாடல் இயற்றி இசையமைத்தவர் : பிரம்மஸ்ரீ.என்.வீரமணிஐயர்.

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | கல்வித்தெய் | வம்அவள் | தானடி | தோழி |
| | நல்வித்தை | யாவும்த | ருவாள | டி |
| | பல்வித | மாகநாம் | பாடுவோம் | வாணியின் |
| | பாதம்ப | ணிந்திடுவோம் | வாருங்க | டி |

2. வெண்டாமரை தனில் வீற்றிருப்பாளடி
வீணாகானம் செய்வாளடி
கொண்டாடிப் பாடிடுவோம் தண்டாமரைப் பாதம்
கண்டு ஆனந்தம் கொண்டாடுங்கடி.

3. தீபங்கள் ஏற்றிடுவோம் ஆரத்தி செய்திடுவோம்
தீந்தமிழ் வாணிபுகழ் பாடிடுவோம்
பாவங்கள் தீர்ப்பாளடி பேதங்கள் போற்றுமடி
கீதம் இசைக்க வருவாளடி.

**தேர்ச்சி** **4.0** :- நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.4** :- பரத நாட்டியம், கண்டியர் நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார்.

**செயற்பாடு** **4.4.4** :- தாண்டவம், லாஸ்யம் ஆகியன பற்றி அறிந்து கொள்வோம்.

## தாண்டவம்

ஆண்களால் ஆடப்படும் வன்மையான நடனம் தாண்டவம் ஆகும். சிவபெருமானே தாண்டவங்களை ஆடிக்காட்டி வகைப்படுத்தியவர் ஆவார். திருக்கைலாயத்தில் சிவபெருமான் K d ḏ ṗ y a ṗy ; v g Ngh J k ; தவம் செய்து கொண்டு இறைவனின் நாட்டியத்தை என்றும் இரசிக்கும் பேறுபெற்ற தண்டு என்ற மகரிஷிக்குச் சிவனால் உபதேசிக்கப்பட்ட அவருடைய நாட்டியம் தான் தாண்டவம் ஆகும். மொத்தமாக 108 தாண்டவங்கள் உள்ளன. அவற்றில் 12 தாண்டவங்கள் முக்கியமானவை. 108 கரணங்கள் என்னும் நிலைகளைப் பயன்படுத்தியதால் தாண்டவம் ஆண்கள் மட்டுமே ஆடக்கூடியது என்று ஒரு சாராரும், ஊர்த்துவ தாண்டவம் தவிர மற்றவை பெண்களும் ஆடலாம் என்று மற்றொரு சாராரும் கூறுவர்.

| தாண்டவ வகை | இடம் | சபை | தொழில் |
|---|---|---|---|
| 1. முனி தாண்டவம் | திருநெல்வேலி | தாமிரசபை | படைத்தல் |
| 2. கௌரி தாண்டவம் | திருப்புத்தூர் | சிற்சபை | காத்தல் (துன்பம்) |
| 3. சந்தியா தாண்டவம் | மதுரை | வெள்ளியம்பல ராஜித சபை | காத்தல் (இன்பம்) |
| 4. திரிபுர தாண்டவம் | திருக்குற்றாலம் | சித்திர சபை | மறைத்தல் |
| 5. ஊர்த்துவ தாண்டவம் | திருவாலங்காடு | ரத்தின சபை | அருளல் |
| 6. சம்ஹார தாண்டவம் | (சுடுகாடு) | -- | அழித்தல் |
| 7. ஆனந்த தாண்டவம் | சிதம்பரம் | தில்லை கனகசபை | ஐந்தொழிலும் |

## லாஸ்யம்

மென்மையான கரண அங்ககாரங்களுடன் சிருங்காரத்தையோ, கருணையையோ முக்கிய சுவையாகக் கொண்டு லலிதமாயும், மிருதுவாயும் பெண்கள் ஆடும் நடனத்திற்கு லாஸ்யம் என்று பெயர். இந்நடனத்தின் முக்கிய தேவதை பார்வதி. அழகு, அருள், நளினம், அங்கசுத்தம், சௌஷ்டவம் முதலியவை இந்த நடனத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. இதில் அபிநயத்துக்கு முக்கியத்துவம் அதிகம். தாண்டவத்திற்கும், லாஸ்யத்திற்கும் தனித்தனி அசைவுகளோ, அடவுகளோ இல்லை. தாண்டவத்தையும், லாஸ்யத்தையும் கையாளும் முறையில் தான் வேறுபாடு உண்டு. ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள இயல்பான குண வேறுபாடு, அசைவுகளில் பிரதிபலிப்பதால் இரண்டு பெயர்களைத் தந்துள்ளார்கள். தேவையான போது ஒரு பெண் தாண்டவத்தையும், ஒரு ஆண் லாஸ்யத்தையும் ஆடலாம். இந்நடனம் சிவனின் மனைவியாகிய உமாதேவியினால் கிருஷ்ணனின் பேரனாகிய அனிருத்தனின் மனைவியும், பாணனின் மகளுமாகிய உஷைக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. உஷையினால் துவாரகையில் உள்ள இடையப் பெண்களுக்கு கற்பிக்க, அவர்கள் மூலமாய் இக்கலை எங்கும் பரவியது.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | :- | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.4** | :- | பரத நாட்டியம், கண்டியர் நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார். |
| **செயற்பாடு** | **4.4.5** | :- | நிருத்த ஹஸ்தங்கள் என்ற பதத்தினை அறிந்து கொள்வோம். |

கரணங்களும் அங்கஹாரங்களும் நிருத்த வகையைச் சார்ந்தவை.

**கரணம்:-**

ஒரே அபிநயத்தை முதலில் வலது கையினால் அபிநயம் செய்து உடனே அதையே இடது கையினாலும் அபிநயம் செய்தல் ஆகும். அக் கையின் அபிநயத்திற்கேற்ப அடிபோடுதலும் இணைந்திருக்கும். அதாவது, கையினாலும் வலது காலினாலும் ஒருங்கே, முதலில் வலது கையினாலும் காலினாலும் அபிநயம் செய்து மீண்டும் அதையே இடது பக்கத்தினாலும் அபிநயம் செய்ய வேண்டும் என்பதாகும். இது 108 வகைப்படும்.

**அங்கஹாரம்:-**

சில கரணங்கள் இடைவெளியின்றிச் சேர்த்து ஆடி முடித்தல் அங்ககாரம் எனப்படும். கரணங்கள் என்னும் மணிகளைக் கோர்த்து மாலை போல் ஆடுவதால் இப் பெயர் ஆயிற்று. ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்தக் கை, கால்களால் இணைந்து செய்யப்படும் அபிநயங்களின் தொகுப்பு ஆகும்.

**நிருத்த ஹஸ்தம்:-**

கரணங்கள், நிருத்தம் ஆகியவற்றில் அபிநயம் செய்யப்படுபவை நிருத்த ஹஸ்தம் எனப்படும். இவை 30 வகைப்படும். நிருத்த ஹஸ்தத்தில் இணையாதகை, இணைந்தகை என்ற வேற்றுமை உண்டு. இவை பற்றி நாட்டிய சாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது. உதாரணம் - பதாகம், ஸ்வஸ்திகம், டோலா, அஞ்சலி, கடகாவர்த்தனம், சகடம், கபித்தம், சிகரம், கீலகௌ கூர்மோ, அலபத்மம் ஆகியன நிருத்த ஹஸ்தங்களாகும்.

**தேர்ச்சி** **4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.5** : பரத நாட்டிய அடவுகளுக்குரிய தாள அங்கக்குறியீட்டை அறிந்துகொள்வார்.

**செயற்பாடு** **4.5.1** : ''தாதெய் தெய்த, தெய்ஹத் தெய்ஹி'' அடவுகளைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவோம்.

## தாதெய் தெய்த - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தா | தெய் | தெய் | த / | தித் | தெய்/ | தெய் | த // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தா தெய் | தெய்த | தித்தெய் | தெய்த/ | தா தெய் | தெய்த/ | தித்தெய் | தெய்த// |
| **3ம் காலம்** | | | | | | | |
| தாதெய் தெய்த | தித்தெய் தெய்த | தாதெய் தெய்த | தித்தெய் தெய்த/ | தாதெய் தெய்த | தித்தெய் தெய்த/ | தாதெய் தெய்த | தித்தெய் தெய்த// |

# தெய்ஹத் தெய்ஹி

| 1 | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய் | ஹத் | தெய் | ஹி/ | தெய் | ஹத்/ | தெய் | ஹி// |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ஹத் | தெய்ஹி | தெய்ஹத் | தெய்ஹி/ | தெய்ஹத் | தெய்ஹி/ | தெய்ஹத் | தெய்ஹி// |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ஹத் தெய்ஹி | தெய்ஹத் தெய்ஹி | தெய்ஹத் தெய்ஹி | தெய்ஹத் தெய்ஹி/ | தெய்ஹத் தெய்ஹி | தெய்ஹத் தெய்ஹி/ | தெய்ஹத் தெய்ஹி | தெய்ஹத் தெய்ஹி// |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.6 :** பஞ்ச ஜாதிகளையும் சப்த தாளங்களையும், தாள அங்கங்களையும் அறிந்து கொள்வார்.

**செயற்பாடு 4.6.1:** பஞ்ச ஜாதிகளையும் அவற்றின் சொற்கட்டையும் அறிந்து கொள்வோம்.

**பஞ்ச ஜாதி**

ஜாதிகள் ஐந்து வகைப்படும். அவை

திஸ்ர ஜாதி
சதுஸ்ர ஜாதி
கண்ட ஜாதி
மிஸ்ர ஜாதி
சங்கீர்ண ஜாதி

என்பனவாகும்.

இவற்றிற்குரிய சொற்கட்டுக்களும் எண்ணிக்கையும் :-

| **ஜாதி** | | **சொற்கட்டு** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| திஸ்ர ஜாதி | - | தகிட | 3 |
| சதுஸ்ர ஜாதி | - | தகதிமி | 4 |
| கண்ட ஜாதி | - | தகதகிட | 5 |
| மிஸ்ர ஜாதி | - | தகிட தகதிமி | 7 |
| சங்கீர்ண ஜாதி | - | தகதிமி தக தகிட | 9 |

**தேர்ச்சி** **5.0** :- நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.2** :- இலங்கையின் பிரதேசவாரியான கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.

**செயற்பாடு** **5.2.1** :- காமன் கூத்தின் கலாசாரப் பின்னணியை அறிவோம்.

## காமன் கூத்து

ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை இலங்கையின் மத்திய பகுதியாகிய மலை நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் தொழிலில் ஈடுபடுவதற்கு இலங்கையர் ஒருவரும் முன்வராத போது இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்களை அழைத்து வந்தனர். அப்படி வந்தவர்களில் கிராமியக் கலைகளில் வல்ல இசைக் கலைஞர்கள் ஆடல், கூத்து கலைஞர்களும் வந்திருந்தனர். இந்தியாவில் தாம் ஆடியும் பாடியும் வந்த கலைகளை இலங்கையிலும் ஆடிப்பாடிப் பரப்பத் தொடங்கினர். அவ்வாறு வந்த கலைகளில் ஒன்றே காமன் கூத்து ஆகும். காமன் கூத்து மலையகத்தில் ஆடப்பட்டு வருகிறது.

இக் கூத்து இரவு தொடக்கம் விடியும் வரை ஆடப்படும். காமன் கூத்துக் கதையின்படி சிவன் தக்கனது தவத்தை அழித்த பின்னர் பெருங்கோபத்தோடு இமயமலையில் தவமிருக்கின்றார். அதனாற் தேவலோகம் அனலால் அவதியுறுகிறது. இந்நிலையில் தேவர்கள் என்ன செய்வதென்று தவிக்கையில் இந்திரன் சிவனுடைய தவத்தையழிக்கச் செல்லும்படி மன்மதனுக்குத் தூதோலை அனுப்புகின்றான். மன்மதன் இந்திரன் கட்டளையை ஏற்றுச் சிவனின் தவத்தையழிக்கச் சென்று மடிகிறான். பின்பு ரதி சிவனிடம் இரந்து வேண்ட மாறன் (மன்மதன்) உயிர் பெறுகின்றான்.

இக்கூத்தைப் பயிற்றுவிப்பதில் காமன் மாஸ்டர் முக்கிய இடம் பெறுகிறார். இவருக்கருகே பக்கப்பாட்டுக் காரர்களும் பக்க வாத்தியக்காரர்களுமிருப்பர். இதன் பக்கவாத்தியம் தப்பு ஆகும். காமன் கூத்து ஆடலும் பாடலும் நிறைந்த ஒரு கலை வடிவமாகும். காமன் கூத்தாட்டம் எளிமையானது. வடமோடி, தென்மோடி ஆட்டம் போல ஆட்ட நுணுக்கங்களை இது கொண்டிருக்கவில்லை. முகப்பூச்சிற்கு அரிதாரம் பயன்படுத்தப்படும். அழகிய சரிகைத் துணிகளினாலான உடைகளை மன்மதன், ரதி ஆகியோர் அணிவர். அழகிய புஜக்கிரீடம், மணிமுடி, மணிமாலைகள், முத்துமாலைகள் என்பவற்றைப் பூணுவர். கழுத்திற் பல வகையான மாலைகளை அணிந்து அழகுபடுத்துவர்.

**தேர்ச்சி** 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.3 : தாளங்ளை விளங்கிக் கொள்வார்.

**செயற்பாடு** 4.3 : ஆதி, ரூபக தாளங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## ஆதி, ரூபக தாளம்

- ஆதி தாளத்தின் மறுபெயர் சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளம்.
- ஆதி தாளத்தின் அட்சர எண்ணிக்கை 8, ரூபக தாளத்தின் அட்சர எண்ணிக்கை 6.
- ஒரு அட்சரத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 4
- ஆகவே ஆதி தாளத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 32, ரூபக தாளத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 24.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.6 :** பஞ்ச ஜாதிகளையும் சப்த தாளங்ளையும் தாள அங்கங்களையும் அறிந்து கொள்வார்.

**செயற்பாடு 4.6.2 :** சப்த தாளங்களையும் அதன் தாள அங்கங்களையும் அறிந்து கொள்வோம்.

## சப்த தாளங்கள்

- துருவ தாளம் I O I I
- மட்டிய தாளம் I O I
- ரூபக தாளம் O I
- ஜம்பை தாளம் I ∪ O
- திரிபுடை தாளம் I O O
- அட தாளம் I I O O
- ஏக தாளம் I

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | :- | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.7** | :- | புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தினையும் கருத்தினையும் கூறுவார். |
| **செயற்பாடு** | **4.7.1** | :- | புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தினையும் அதன் கருத்தையும் அறிந்து கொள்வோம். |

## புஷ்பாஞ்சலி

நடன நிகழ்ச்சிகளில் ஆரம்ப நிகழ்வாக இடம்பெறும் இந்த நடனம், மலர்களினால் இறைவனுக்கு அஞ்சலி செய்வது, வணங்குவது போல் ஆடப்படுவதால் புஷ்பம்+அஞ்சலி=புஷ்பாஞ்சலி எனப்படுகின்றது.

**ஸ்லோகம்:-**

விக்னானாம் நாஷனம் கர்த்தும்

பூதானாம் ரக்ஷ நாயச்ச/

தேவானாம் துஷ்டயே சாபி

பிரேக்ஷ கானாம் விபூதையே//

ஸ்ரேய ஸே நாயகஸ்யாத்ர

பாத்ர ஸம் ரக்ஷ நாயச/

ஆசார்ய ஷிக்ஷா சித்யர்த்தம்

புஷ்பாஞ்சலி மதாரபேத்//

**கருத்து**:-

தீமைகளை அழிப்பதற்காகவும், உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும், தேவர்களை மகிழ்விப்பதற்காகவும், பார்வையாளர்களின் செழிப்பிற்காகவும், நாட்டியக் குழுவின் தலைவனின் நன்மைக்கும், நாட்டியப் பாத்திரத்தின் நல்ல பாதுகாப்பிற்கும், ஆசானின் கல்விச் சித்திக்கும் இறைவனை வேண்டி மலர்களைத் தூவி அஞ்சலி செய்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** | :- | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **5.3** | :- | கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார். |
| **செயற்பாடு** | **5.3.1** | :- | கரகம் பற்றி அறிந்து கொள்வோம். |

## கரகம்

மக்கள் வாழ்க்கையிலிருந்து தாமாகவே தோன்றிய நாட்டுப்புறக் கலைகள் அம்மக்களின் வாழ்க்கையில் ஆழமாக வேரூன்றி உள்ளன. கரகாட்டம் தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் இன்றும் நடைபெற்று வருகின்றது. கரகாட்டம் சமயச்சடங்குகளிலிருந்து தோன்றி வளர்ந்துள்ள ஒரு கலையாகும்.

மாரியம்மனை வேண்டி ஆண்டு தோறும் தை மாதத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் மாரியம்மன் பண்டிகை எனும் பேரில் விழா எடுக்கப்படுகின்றது. மாரியம்மன் அம்மை நோயிலிருந்து மக்களைக் காக்கும் தெய்வமாகப் போற்றப்படுகின்றாள். இத் தெய்வத்திடம் தமது வேண்டுதல்களை வைத்து அவை நிறைவேறியதும் மாரியம்மன் பண்டிகை நாளில் கரகம் எடுத்துத் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். பிரதான வாத்தியம் உடுக்கு ஆகும்.

நன்கு அலங்கரிக்கப்பட்ட செம்புக் கரகத்தைத் தலையில் வைத்து, நையாண்டி மேள இசைக்கேற்ப, கரகம், ஆடப்படுகின்றது. முதலில் ஆண்கள் மிகுதியாக ஆடிய கரகாட்டத்தில் தற்போது பெண்கள் மிகுதியாகப் பங்கேற்று ஆடுகின்றார்கள். சுட்டிகொட்டு, உருளைஉறுமி, தவில், பம்பை, நாதசுரம் அன்றேல் நாதஸ்வரம், சுருதிப்பெட்டி, தாளம் ஆகிய இசைக்கருவிகள் வாசிக்கப்படுகின்றன.

இடத்திற்கு இடம் ஆடை, அலங்காரங்கள் வேறுபடுகின்றன. காலோடு ஒட்டிய பிஜாமா, மேற்சட்டை, பாவாடை தாவணி, சேலை, ஆகியவை அணிந்தும் ஆடப்படுகின்றது.

ஊர்த்திருவிழா, திருமணவிழா, காதணிவிழா, மஞ்சள் நீராட்டு விழா, அரசியல் கட்சி ஊர்வலம் போன்ற, வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இவர்கள் கரகாட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** | :- | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **5.3** | :- | கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார். |
| **செயற்பாடு** | **5.3.2** | :- | காவடி பற்றி அறிந்து கொள்வோம். |

## காவடி

கிராமிய நடனங்களில் பக்திசார் நடனங்களில் ஒன்று காவடியாகும். இது முருகப்பெருமானுக்கு நேர்த்திக்கடன் வைத்துக் காணிக்கை செலுத்தும் நடனமாகும். காவடி நடனத்தின் தோற்றம், பூர்வீகமான சுமை தூக்கும் செயற்பாட்டோடு இணைந்தது. பல்லக்குப் போலச் சிறியதாக அமைத்து அதனைத் தோளில் தூக்கிச் சென்று ஆலயத்தில் ஆடி இறக்கி வைப்பது காவடி ஆட்டத்தின் பொதுவான மரபு. காணிக்கைப் பொருட்களை ஒரு தடியின் இருமுனைகளிலும் கட்டித் தூக்கிச் சென்றனர். இதனைக் காவுதடி என்போம். இதிலிருந்தே காவடி நடனம் பிற்காலாத்தில் தோற்றம் பெற்றது.

முருக வழிபாட்டோடு காவடியாட்டம் முருகனின் புகழ் பாடுதலையே நோக்கமாகக் கொண்டிருக்கும். இவை பல்வேறுபட்ட இராக வேறுபாடுகளுடன் கூடிய காவடிச்சிந்துகளாகும். பாட்டிற்கு நிறுத்தற் குறிகள் போலவே, அவ்வப்போது ‘‘வேல்வேல்’’ ‘‘அரோகரா’’ என்று ஒலி எழுப்பிப் பக்தியை வெளிப்படுத்துவதற்குச் சமூகப் பின்புலம் வளமாகக் காணப்பட்டது. தவில், நாதசுரம் அன்றேல் நாதஸ்வரம், உடுக்கை, முழவு, செண்டை, பறை, மத்தளம், சுத்தமத்தளம், ஆகிய இசைக்கருவிகள் காவடி நடனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

காவடி நடனம் எந்த வயதைச் சேர்ந்தவர்களாலும் ஆடக்கூடியதாக இருக்கின்றது.

| | | |
|---|---|---|
| காவடி நடனவகைகள் | :- | சித்திரக் காவடி, துலாக்காவடி, பறவைக்காவடி, மச்சக்காவடி, பாற்காவடி, பன்னீர்க்காவடி, சந்தனக்காவடி, சேவற்காவடி, புஷ்பக்காவடி, |
| சந்தர்ப்பம் | :- | தேர்த்திருவிழா, நேர்த்திக்கடன். |